இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 64 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 27 – புதன்கிழமை 14 அக்டோபர் 2026 – மதுரை 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 64 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 27 - Wednesday 14 October 2026 - Madurai 10 Pages ₹ 5.00

'தமிழ்நாடு' என்ற பெயர் இம்மாநிலத்தில் ஒலிக்குமட்டும்

சங்கரலிங்கனாரின் புகழ் ஓயாது!

நினைவுநாளையொட்டி – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக். 14 -

"தமிழ்நாடு' என்ற பெயர் இம்மாநிலத்தில் ஒலிக்குமட்டும் சங்கரலிங்கனாரின் புகழும் ஓயாது! தமிழ்நாடு வாழ்க!" என்று அவரது நினைவுநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.



இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

தமிழ்நாடு எனும் பெயருக்காக உயிரையே கொடுத்த உணர்வாளர் சங்கரலிங்கனார் நினைவு நாள்!

வரலாற்றில் பல பெயர்கள் இருக்கலாம். ஆனால், ஒரு பெயருக்காக உயிரையே இழந்த வரலாறுதான் விருதுநகர் தந்த வீரத்தியாகி சங்கரலிங்கனாருடையது.

தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு எனப் பெயர்சூட்ட வேண்டுமென 76 நாட்கள் உண்ணாநோன்பிருந்தார். இறுதியில் உயிரையே துறந்தார்.

ஆயினும் அன்றைய ஆட்சியாளர்கள் அவரது கோரிக்கையை நிறைவேற்றவில்லை. கழக ஆட்சி அமையும்வரை காலம் கனிய வில்லை.

வென்றது கழகம்! வந்தார் அண்ணா! தமிழ்நாடு தமிழ்நாடானது!

வென்றது கழகம்! வந்தார் அண்ணா! நிறைவேற்றினார் தீர்மானத்தை! தமிழ்நாடு தமிழ்நாடானது!

தமிழ்நாடு பெயர்சூட்டலில் பல பேரின் போராட்டங்கள், தியாகங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சளைக்காத முயற்சிகள் அடங்கியுள்ளன. ஆனால், இப்போராட்டத்தில் தனது இன்னுயிரையே இழக்கத் துணிந்த சங்கரலிங்கனாரின் தமிழுணர்வுக்கு ஈடு இணை ஏதுமில்லை.



தமிழ்நாடு என்ற பெயர் இம்மாநிலத்தில் ஒலிக்குமட்டும் சங்கரலிங்கனாரின் புகழும் ஓயாது! தமிழ்நாடு வாழ்க!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

த.வெ.க. ஆட்சியின் அவலம்!

மின் மீட்டர் கணக்கீட்டில் தொடரும் குளறுபடி!

கூடுதல் கட்டணத்தால் நுகர்வோர் கடும் அவதி!

சென்னை, அக். 14 -

முதலமைச்சர் விஜய் தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகு மின் மீட்டர் கணக்கீட்டில் தொடரும் குளறுபடியால் நுகர்வோர் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், மின் நுகர்வோர் கடும் அவதிக் குள்ளாகி இருக்கின்றனர்.

மின் நுகர்வோர் பயன்படுத்தும் மின்சார பயன்பாடு குறித்த கணக்கீடு 2 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் மின்வாரியத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

த.வெ.க. ஆட்சி வந்த பிறகு மின் மீட்டர் கணக்கீட்டில் பல குளறுபடிகள் இருக்கின்றன என்று நுகர்வோர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இதுவரை இல்லாத அளவுக்கு பல வீடுகளுக்கு இருமடங்கு கட்டணம் அதிகரித்துள்ளது என்றும், சில வீடுகளுக்கு பல மடங்கு கட்டணம் அதிகரித்துள்ளது என்றும் புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் மின் வாரியத்துக்கு புகார் அளித்தும் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இது தொடர்பாக விளக்கம் கேட்டு சம்பந்தப்பட்ட மின்வாரியத்தை பொதுமக்கள் தொடர்பு கொண்டால் அங்கிருக்கும் அலுவலர்கள் மிக அலட்சியமாக பதில் அளிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனால் வேறு வழியில்லாமல் அதிகப்படியான கட்டணத்தை செலுத்த வேண்டிய நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மின் மீட்டர் கணக்கெடுப்பில் தொடர்ந்து குளறுபடி நிலவி வருவது பொது மக்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

அதாவது, சென்னையில் பெரும்பாலான பகுதியில் உள்ள பல வீடுகளில் மின் மீட்டர் குறிப்பிட்ட யூனிட்டுகளை எட்டுவதற்கு முன்பே அதனை எட்டி விட்டதாக கூறி மின் கணக்கீடு செய்யப்பட்டு அதற்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது மின் நுகர்வோர் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

எந்த வெளிப்படைத் தன்மையும் இல்லை!

த.வெ.க. அரசின் மின்சாரக் கொள்முதலில் ஊழல்!

முன்னாள் மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி குற்றச்சாட்டு!

சென்னை, அக். 14 -

த.வெ.க. அரசின் மின்சார கொள்முதலில் மிகப்பெரிய முறைகேடும், ஊழலும் அரங்கேறியுள்ளதாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு : –

மின் தடை குறித்த செய்தி வராத நாளே இல்லை. அரசு கூட்டங்கள், தலைமைச் செயலகம், அமைச்சர்களின் கூட்டங்கள் என மின்வெட்டு ஏற்படுகிறது. பட்டமளிப்பு விழாவில் தொடங்கி தலைமைச் செயலகம் வரை மின்வெட்டு நீண்டுள்ளது.

மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தனது துறையை தவிர்த்து மற்ற துறைகளுக்கு பதில் அளிப்பார். வெறும் ரீல்ஸை மட்டுமே முன் வைத்து ஆட்சிக்கு வந்த டம்மி முதல்வர், மக்கள் இன்னல்களை பற்றி கவலைப்படவில்லை.

மின்வெட்டுக்கு பியூஸ் கோரியர் திருட்டு என்றார்கள், பிறகு பஞ்சாப் சென்று பாருங்கள் என்றார்கள், த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்றது முதல் மின்வெட்டு தொடர்பாக எந்த நடவடிக்கையும் இல்லை. தி.மு.க. ஆட்சியின் போது எந்த வித தடையும் இன்றி சீராக மின்விநியோகம் செய்யப்பட்டது. த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்று 5 மாதங்களாகியும் மின்வெட்டை சரி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மின்சாரம் கொள்முதல் செய்ய நவம்பர், டிசம்பரிலேயே ஏற்பாடு செய்து டெண்டர் விடுவோம்.



தி.மு.க. ஆட்சியில் உபரி மின்சாரம்!

தி.மு.க. ஆட்சியில் ஆண்டுதோறும் மின் தேவை அதிகரித்துக் கொண்டே வந்தது. 5 ஆண்டுகளில் 4,349 மெகா வாட் மின்சார தேவை அதிகரித்தது. 8,600 மில்லியன் யூனிட் அளவுக்கு உபரியாக இருந்ததை வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்தோம். மின்மாற்றிகள் குறைந்த அளவில் பழுதாக கூடிய நமது மாநிலத்தில் எப்படி மின்வெட்டு ஏற்படுகிறது. தி.மு.க. ஆட்சியின்போது TANGEDCOவின் மின் உற்பத்தி 13,000 மெகாவாட் வரை அதிகரிக்கப்பட்டது. ஆந்திராவில் மின்சாரம் கொள்முதல் செய்வதாக தகவல் வந்துள்ளது. அதற்குள் நான் செல்லவில்லை.

வெளிச்சந்தையில் கொள்முதல்!

மின் உற்பத்தி தமிழ்நாட்டின் சொந்த மின் உற்பத்திய குறைத்து வெளிச்சந்தையில் கொள்முதல் செய்வதற்கான முன்னெடுப்புகளை எடுத்துள்ளார் அமைச்சர் நிர்மல்குமார். வெளிச்சந்தையில் யூனிட்டிற்கு ரூ.35க்கு கொள்முதல் செய்வது,

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

நிர்வாகத் திறனற்ற 'டம்மி' முதலமைச்சர் ஆட்சியில்

தமிழ்நாட்டில் உச்சத்தில் விலைவாசி!

நாட்டிலேயே முதலிடம் பெற்ற அவலம்!
ஒன்றிய புள்ளியியல் அமைச்சகம் தகவல்!

சென்னை, அக். 14 -

தமிழ்நாட்டில் சில்லறை பணவீக்கம் செப்டம்பர் மாதத்தில் 6.81% ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் நாட்டிலேயே அதிக பணவீக்கம் கொண்ட மாநிலங்களில் புதுச்சேரிக்கு அடுத்தபடியாக தமிழ் நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

உணவு பொருட்களின் விலை உயர்வு காரணமாக இந்தியாவின் ஒட்டுமொத்த சில்லறை பணவீக்கமும் ரிசர்வ் வங்கியின் 6% உச்ச வரம்பை நெருங்கியுள்ளது.

ஒன்றிய புள்ளியியல் அமைச்சகம் நேற்று முன்தினம் இந்தியாவில் பதிவான புள்ளி விவரங்கள் குறித்த ரிப்போர்ட்டை வெளியிட்டு இருந்தது. நாட்டில் எவ்வளவு பணவீக்கம் நிலவுகிறது என்பதை பொறுத்தே வட்டி விகிதம் உட்பட அனைத்தும் முடிவு செய்யப் படும் என்பதால் பொதுமக்கள் இதை உற்று கவனித்தே வருகிறார்கள்.

சில்லறை பணவீக்கம்

இந்த சூழலில் தான் மத்திய புள்ளியியல் அமைச்சகம் பணவீக்கம் தொடர்பான தகவல்களை பகிர்ந்துள்ளது. இந்தியாவின் சில்லறை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 4.83%ஆக இருந்த நிலையில், செப்டம்பரில் 5.54%ஆக அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில் உணவு பணவீக்கம் 5.97%லிருந்து 7.74% ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு மோசம்

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பொறுத்தவரை புதுச்சேரியில் தான் பணவீக்கம் உச்சத்தில் இருக்கிறது. அங்கு பணவீக்கம் அதிகபட்சமாக 6.86% பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் 6.81% பணவீக்கம் பதிவாகியுள்ளது. ஒடிசாவில் 6.70%. மத்திய பிரதேசத்தில் 6.68%, தெலுங்கானாவில் 6.64% பணவீக்கம் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

